செ.வெ.எண்: 46 நாள்:17.08.2016

## பத்திரிகைச்செய்தி

புதுக்கோட்டை மாவட்டத்தில் விவசாயிகள் சம்பா பருவ சாகுபடிக்கு ஆயுத்தமாகும் இத்தருணத்தில் இரசாயன உரங்களின் விற்பனை விலை தொடர்பாக புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு. கணேஷ் அவர்கள் விடுத்த செய்திக் குறிப்பில் கூறியதாவது:-

புதுக்கோட்டை மாவட்டத்தில் சம்பா பருவத்தில் நெல் 73100 ஹெக்டேரிலும், ரபி பருவத்தில் சிறுதானியங்கள் 4700 ஹெக்டேரிலும், பயறுவகை பயிர்கள் 5618 ஹெக்டேரிலும், எண்ணெய்வித்துப் பயிர்கள் 10890 ஹெக்டேரிலும் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டு விவசாயிகள் நிலம் தயார் செய்யும் பணி மேற்கொண்டு வருகின்றனர். இத்தருணத்தில் விவசாயத்திற்குத் தேவையான இரசாயன உரங்களை தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மற்றும் தனியார் உர விற்பனை மையங்களில் தேவைக்கேற்ப இருப்பு வைத்திட வேளாண்மை மற்றும் கூட்டுறவு துறை வாயிலாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிதியாண்டு துவக்கத்தில் இருந்த நிலையினை விட தற்போது உரங்களின் விற்பனை விலை குறைக்கப்பட்டுள்ளது. நிறுவன வாரியாக விற்பனை விலை கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது.

உர நிறுவன வாரியாக உரங்களின் விற்பனை விலை 50 கிலோ மூட்டைக்கு உர வாரியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**இப்கோ** நிறுவனத்தின் டி.ஏ.பி உரம் 20.07.2016 முதல் ரூ.1185/-லிருந்து ரூ.1100/- ஆகவும், காம்ப்ளக்ஸ் (20:20:0:13) உரம் 25.05.2016 முதல் ரூ.875/-லிருந்து ரூ.825/- ஆகவும், காம்ப்ளக்ஸ் (10:26:26) உரம் 25.05.2016 முதல் ரூ.1080/-லிருந்து ரூ.1030/- ஆகவும் விற்பனை விலை குறைக்கப்பட்டுள்ளது.

**கிரிப்கோ** நிறுவனத்தின் டி.ஏ.பி(இறக்குமதி) உரம் 22.07.2016 முதல் ரூ.1210/- லிருந்து ரூ.1135/- ஆகவும், பொட்டாஷ்(இறக்குமதி) உரம் 22.07.2016 முதல் ரூ.800/- லிருந்து ரூ.550/- ஆகவும், காம்ப்ளக்ஸ் (20:20:0:13) உரம் 22.07.2016 முதல் ரூ.875/- லிருந்து ரூ.825/- ஆகவும் விற்பனை விலை குறைக்கப்பட்டுள்ளது.

**ஐபிஎல்** (இந்தியன் பொட்டாஷ் லிமிடெட்) நிறுவனத்தின் டிஏபி(இறக்குமதி) உரம் 18.07.2016 முதல் ரூ.1210/- லிருந்து ரூ.1085/- ஆகவும், பொட்டாஷ்(இறக்குமதி) உரம் 18.07.2016 லிருந்து ரூ.750/-லிருந்து ரூ.550/- ஆகவும், காம்ப்ளக்ஸ் (16:16:16) உரம் ரூ.900/-லிருந்து ரூ.850/- ஆகவும், காம்ப்ளக்ஸ் (20:20:0:13) உரம் 18.07.2016 முதல் ரூ.905/-லிருந்து ரூ.855/- ஆகவும், காம்ப்ளக்ஸ் (15:15:15:9) 18.07.2016 முதல் ரூ.890/- லிருந்து ரூ.840/- ஆகவும் விற்பனை விலை குறைக்கப்பட்டுள்ளது.

**ஆர்சிஎப்** (ராஷ்ட்ரிய கெமிக்கல்ஸ் அண்டு பெர்ட்டிலைசர்ஸ்) நிறுவனத்தின் டிஏபி(இறக்குமதி) உரம் ரூ.825/-லிருந்து ரூ.550/- ஆக விற்பனை விலை குறைக்கப்பட்டுள்ளது.

..2..

**ஃபேக்ட்** (பெர்ட்டிலைசர்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் திருவாங்கூர் லிமிடெட்) நிறவனத்தின் காம்ப்ளக்ஸ் (20:20:0:13) உரம் 21.07.2016 முதல் ரூ.909/- லிருந்து ரூ.889/- ஆகவும், காம்ப்ளக்ஸ் (20:20:0:13:03) உரம் 21.07.2016 முதல் ரூ.934.50 லிருந்து ரூ.914/- ஆகவும், விற்பனை விலை குறைக்கப்பட்டுள்ளது.

**எம்சிஎப்** நிறுவனத்தின் பொட்டாஷ் உரம் 29.09.2016 முதல் ரூ.800/- லிருந்து ரூ.550/- ஆகவும், டிஏபி உரம் 01.07.2016 முதல் ரூ.1190/- லிருந்து ரூ.1100/- ஆகவும் காம்ப்ளக்ஸ் (20:20:0:13) உரம் 01.06.2016 முதல் ரூ.913/- லிருந்து ரூ.865/- ஆகவும் விற்பனை விலை குறைக்கப்பட்டுள்ளது.

**ஸ்பிக்** நிறுவனத்தின் டிஏபி உரம் 19.07.2016 முதல் ரூ.1275/- லிருந்து ரூ.1150/- ஆகவும், காம்ப்ளக்ஸ் (20:20:0:13) உரம் 22.07.2016 முதல் ரூ.925/- லிருந்து ரூ.875/- ஆகவும் விற்பனை விலை குறைக்கப்பட்டுள்ளது.

உர விற்பனையாளர்கள் விவசாயிகளுக்கு விற்பனை செய்யும் ஒவ்வொரு மூட்டை உரத்திற்கும் அதிகபட்ச விற்பனை விலைக்கு மிகாமல் விற்பனை செய்ய வேண்டும். உரங்களின் இருப்பு மற்றும் அதிகபட்ச விற்பனை விலையை தினந்தோறும் விலை விபரப் பலகையில் எழுதி விவசாயிகள் காண்பதற்கு ஏதுவாக அறிவித்திட வேண்டும்.

உரங்களை அதிகபட்ச விற்பனை விலைக்கும் அதிகமான விலையில் விற்பனை செய்யும் விற்பனையாளர்கள் மீது உர கட்டுப்பாட்டு ஆணையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், விவசாயிகள் இதில் தெரிவிக்கப்பட்டுள்ள விலை விபரங்களைக் குறித்து வைத்துக்கொண்டு, நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு மட்டுமே உரங்களைப் பெற்று பயன்படுத்துமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

மேலும் அதிகப்படியான விற்பனை விலையில் விற்பனை செய்யும் விற்பனையாளர்கள் குறித்து அந்தந்த வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் / வேளாண்மை அலுவலரிடம் புகார் தெரிவிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**